DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C. C. No. 34 / 2021 |
| Deposition of witness | : | P. W – 4 |
| Name | : | சாமிநாதன் |
| Father's /Husband Name | : | கலியபெருமாள் |
| Village | : | குடவாசல் |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 54 |
| Occupation | : | தலைமைக்காவலர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 19h day November, 2025.
Accused present.

**சாட்சி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

முதல் தகவல் அறிக்கையை ஏழு நாட்கள் காலதாமதமாக அனுப்பப்பட்டதற்கு சிறப்பு காரணம் உண்டா என்றால் இல்லை. புகாரில் கட்டையால் அடித்ததாக இடைச்சொறுகலாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகாரில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரம் காலை நேரமா அல்லது இரவு நேரமா என்று குறிப்பிட்டு கூறப்படவில்லை என்றால் சரிதான். புகார்தாரருக்கு ஏதேனும் மருத்துவ குறிப்பாணை அளித்தேனா என்றால் இல்லை. சம்பவம் இவர் இவருக்கு தெரியும் என்று பெயர் குறிப்பிட்டு புகார் அளிக்கப்பட்டதா என்றால் இல்லை. எதிரிக்கும், புகார்தாரர் குடும்பத்திற்கும் நிலம் தொடர்பான பிரச்சனை உள்ளது என்றால் சரிதான். புகார் ஒரு நாள் காலதாமதமாக அளிக்கப்பட்டுள்ளதற்கு காரணம் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். எதிரி திட்டியதால் அவமானம் ஏற்பட்டதாகவும், மிரட்டியதால் பயம் ஏற்பட்டதாக புகாரில் குறிப்பிட்டுள்ளாரா என்றால் ஆபத்து வந்துவிடுமோ என்ற பயம் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார். புகாரில் இரண்டாவது பக்கத்தில் காயம் ஏற்பட்டவுடன் என்ற வார்த்தை இடைச்சொறுகலாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சொல்வது போல் புகார் மனு பெறப்படவில்லை என்றாலும், பொய்யான புகாரை பெற்று தவறான முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

M S
BHARATHIDHASAN

Digitally signed by
M S
BHARATHIDHASAN
Date: 2025.12.12
12:04:32 +0530